செயல்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி சேலம் மாநகராட்சியிலும் செயல்படுத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கார்த்தி.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சியில் குறைந்தது 300 மெட்ரிக் டன், அதிகபட்சம் 400 மெட்ரிக் டன் வரை கழிவுகள் கிடைக்கின்றன. அங்கே குறிப்பாக, இடம் இல்லாமல், நகராட்சிப் பகுதிகளிலே தூய்மைப்படுத்தி, மீண்டும் குப்பைகளைப் போடுகின்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. 15 ஏக்கர் நிலம் கண்டிப்பாக மாநகராட்சியை ஒட்டிய பகுதியிலே இன்றைக்குக் கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கின்றது. கண்டிப்பாக அதை மாநகராட்சி நிர்வாகம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். சேலம் மாநகராட்சியின் சார்பாக, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, இன்றைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.29 இலட்சம் மின்சாரக் கட்டணமாக மாநகராட்சி கட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அந்தத் திட்டத்தை மாநகராட்சி ஏற்று நடத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கார்த்தி அவர்கள் குறிப்பிட்டதுபோல, சென்னை மாநகராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகளுடைய தீர்மானத்தின் அடிப்படையில் அத்தியாவசிய தேவைகளை, மிக முக்கியமாகக் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கேள்வியை தமிழக அரசு— மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு—ஆய்விற்கு எடுத்துக்கொள்ளும்; பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 193, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

193—

கால்நடை மருத்துவமனை

***23383—திருமதி வி. அழகம்மாள்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 7]

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, மணிவிழுந்தான் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலே செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி, மணிவிழுந்தான் ஊராட்சியில் இப்போது சுமார் 10,500 கால்நடைகள் உள்ளதால், ஒரு புதிய கால்நடை மருந்தகம் அங்கே தொடங்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு விரைவில் எடுத்துச் சென்று, மணிவிழுந்தான் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசிலிக்கும் என்பதை அன்போடு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி. அழகம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஒன்றியம், மணிவிழுந்தான் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்றுப் பரிசீலிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டிலேயே கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக மணிவிழுந்தான் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்கத் தயார் நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்மீது உரிமைப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன். என்னவென்று சொல்லுங்கள். திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆம் தேதி இந்த மாமன்றத்தில் நடைபெற்ற கல்வி மானியம் குறித்த விவாதத்தில் உரையாற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், உறுப்பினர் வள்ளல் பெருமான் உரையாற்றுகிறபோது குறுக்கிட்டு, ஜி.ஓ. நம்பர் 56, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே போடப்பட்டது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, துரைமுருகன், அதுகுறித்து...

திரு. துரைமுருகன்: நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) அப்படி உண்மைக்கு மாறான ஒரு தகவலை, வேண்டுமென்றே இந்த அவையிலே தெரிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து ஓர் உரிமைப் பிரச்சினையை நான் தந்திருக்கிறேன். அந்த உரிமைப் பிரச்சினை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பிறகு எடுத்துக்கொள்ளலாம். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. ஆ ய் வி ல். (சிரிப்பு)

திரு. துரைமுருகன்: எ ப் போ து? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. செம்மலை: ஜி.ஓ. 56 பற்றி நான் சொல்லவில்லை. அதற்கு நான் பிறகு விளக்கம் சொல்கிறேன்.